(2) LEASING OUT OF GOVERNMENT AND PRIVATE CULTIVABLE WASTE LANDS TO POOR AGRICULTURAL LABOURERS.

SRI K. C. GOPALAN UNNI : Sir, I move—

"This Assembly recommends to the Government to take urgent steps for the leasing of cultivable waste lands belonging to both the Government and private landlords to agricultural labourers and poor peasants."

SRI P. K. GOPALAKRISHNAN : I second the motion.

MR. SPEAKER : Motion moved—

"This Assembly recommends to the Government to take urgent steps for the leasing of cultivable waste lands belonging to both the Government and private landlords to agricultural labourers and poor peasants."

SRI K. C. GOPALAN UNNI : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഈ പ്രമേയത്തിന്റെ തത്വം ഗവമ്മേണ്ടു വളരെ മുമ്പുതന്നെ വാക്കുകൊണ്ടു് അംഗീകരിച്ചിട്ടുള്ളതാണു്. പ്രയോഗത്തിൽ വരുത്തേണ്ട താമസമേയുള്ളൂ. പ്രയോഗത്തിൽ കൊണ്ടുവരുന്നതിനുള്ള ഒരു ശുപാർശ മാത്രമാണു് ഈ പ്രമേയം. മലബാറിലാണെങ്കിൽ കഴിഞ്ഞ നാലു കൊല്ലക്കാലമായി ഗവമ്മേണ്ടിൽനിന്നും കിട്ടിക്കൊണ്ടിരിക്കുന്ന മറുപടികളിൽനിന്നും വെളിപ്പെട്ടിട്ടുണ്ടു്, കൃഷിക്കുപയുക്തമായുള്ള ലക്ഷക്കണക്കിനേക്കർ ഭൂമി തരിശായി കിടക്കുകയാണെന്നു്. ഈ രാജ്യത്തു കർഷകത്തൊഴിലാളികൾക്കും ചെറിയ കൃഷിക്കാർക്കും ആണ്ടിൽ ആറുമാസത്തിലധികം പ്രവൃത്തിയൊന്നുമില്ലെന്നു ഇന്ത്യാ ഗവമ്മേണ്ടു നടത്തിയ പല അന്വേഷണങ്ങളുടേയും റിപ്പോർട്ടുകളിൽനിന്നു സ്പഷ്ടമാണു്. അങ്ങനെയുള്ള ഒരു നാട്ടിൽ, കൃഷിചെയ്യാൻ ഭൂമിയില്ലാതെ കൃഷിക്കാർ പട്ടിണികിടക്കുന്ന ഒരു നാട്ടിൽ, രാജ്യത്തെങ്ങുമുള്ള കൃഷിക്കുപയുക്തമായ തരിശുഭൂമികൾ കൃഷിത്തൊഴിലാളികൾക്കും ചെറിയ കൃഷിക്കാർക്കും പതിച്ചുകൊടുക്കുമെന്നു വാക്കാൽ പറഞ്ഞുനടക്കാതെ ഭൂമി കൊടുക്കുന്നതിനു അടിയന്തിരമായ നടപടികൾ കൈക്കൊള്ളേണ്ടതു് അത്യാവശ്യമാണെന്നു പ്രത്യേകം പറയേണ്ടതില്ലല്ലോ. ഇതു പറഞ്ഞാൽ മന്ത്രിമാർ പറയും സേലം ജില്ലയിൽ ആയിരക്കണക്കിനേക്കർ കൊടുത്തിട്ടുണ്ടു്, മററു പല ജില്ലകളിലും കൊടുത്തിട്ടുണ്ടു് എന്നെല്ലാം. ശരിയാണു്. കുറച്ചെല്ലാം കൊടുത്തിട്ടുണ്ടെന്നു ഞാനും മനസ്സിലാക്കുന്നുണ്ടു്. എന്നാൽ, അതു കൊണ്ടായില്ല. ഈ പ്രശ്നത്തിന്റെ ഗൌരവം എത്രയുണ്ടെന്നു ഗവമ്മേണ്ടു ഇനിയും മനസ്സിലാക്കിയിട്ടില്ലെന്നാണു് ഗവമ്മേണ്ടിന്റെ പ്രവൃത്തിയിൽനിന്നും അലസഗതിയിൽനിന്നും സ്പഷ്ടമാകുന്നതു്. ഇന്നു നാട്ടിൽ വളരെയധികം കുടിയൊഴിപ്പിക്കലുകൾ നടക്കുന്നുണ്ടു്. ലക്ഷക്കണക്കിനേക്കർ തരിശു ഭൂമികൾ കിടക്കുമ്പോൾ അതൊട്ടു കൃഷിക്കു കൊടുക്കുന്നില്ലെന്നു മാത്രമല്ല, കൃഷി ചെയ്തുവരുന്ന ഭൂമികളിൽനിന്നുപോലും കൃഷിക്കാരെ ഒഴിപ്പിച്ചു പുറത്താക്കുന്ന കാഴ്ചയാണു് എങ്ങും കാണുന്നതു്. തരിശുഭൂമികൾ കൊടുക്കും കൊടുക്കുമെന്നു വളരെക്കാലമായി പ്രസംഗിച്ചു കഴിച്ചുകൂട്ടുകയാണു്. ഇനിയെങ്കിലും ഒട്ടും കാലതാമസം വരുത്താതെ അതു പ്രയോഗത്തിൽ കൊണ്ടുവരേണ്ടതിന്റെ ആവശ്യകത ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽപ്പെടുത്താനാണു് ഞാൻ ഈ പ്രമേയം അവതരിപ്പിച്ചിട്ടുള്ളതു്. മലമ്പുഴ അണക്കെട്ടു വന്നതിന്റെ ഫലമായി അവിടെയുണ്ടായിരുന്ന എത്രയോ ആദിവാസികൾക്കു വീടും കുടിയുമെല്ലാം ഉപേക്ഷിച്ചു പോകേണ്ടിവന്നിട്ടുണ്ടു്. അവക്കു് സ്ഥലം കൊടുക്കാൻ ഗവമ്മേണ്ടു ദയ പ്രദർശിപ്പിച്ചിട്ടില്ല. സ്ഥലമില്ലാഞ്ഞിട്ടല്ല. മലബാറിൽ തരിശു ഭൂമികൾ ധാരാളം കിടപ്പുണ്ടെന്നു ഗവമ്മേണ്ടിന്റെ കണക്കുകൾകൊണ്ടു തന്നെ സ്പഷ്ടമാണു്. എനിക്കുതന്നെ അറിയാം, വടശ്ശേരി മന്നാടിയാരുടേയും പൂമുള്ളി നമ്പൂരിപ്പാടിന്റെയും മററും വകയായി ആയിരക്കണക്കിനേക്കർ കൃഷിയോഗ്യമായ ഭൂമി തരിശായി കിടപ്പുള്ളതു്. ജനപ്പെരുപ്പവും തൊഴിലില്ലായ്മയും ഭയങ്കരമായ തോതിലുള്ള മലബാറിൽ എത്രയോ ആയിരം ഏക്കർ ഭൂമി തരിശായി കിടപ്പുണ്ടെന്നു പറഞ്ഞാൽ വിശ്വസിക്കാൻ പ്രയാസമായിരിക്കും. എങ്കിലും, അതു് ഒരു യാഥാർത്ഥ്യം മാത്രമാണു്. ഈ കാര്യത്തെ സംബന്ധിച്ചു ദീർഘമായി പ്രസംഗിക്കേണ്ട ആവശ്യമുണ്ടെന്നു തോന്നുന്നില്ല. പ്രശ്നത്തിന്റെ ഗൌരവവും അടിയന്തിരാവസ്ഥയും ഗവമ്മേണ്ടിന്റെ കണ്ണിൽ 11-54 a.m.

പ്പെടണമെന്നും ഗവര്‍മ്മേണ്ടു ഒന്നു ചലിച്ചു കാണണമെന്നും മാത്രമേ എനിക്കാഗ്രഹമുള്ളു. അതുകൊണ്ടു് ഗവര്‍മ്മേണ്ടു ഈ പ്രമേയത്തെ അംഗീകരിക്കണമെന്നും അടിയന്തിരമായി പ്രവൃത്തിയില്‍ കൊണ്ടുവരണമെന്നും ഞാന്‍ അഭ്യര്‍ത്ഥിക്കുന്നു.’

11–57 a.m.

Sri M. PALANIYANDI: அவைத் தலைவர் அவர்களே, நண்பர் K. C. கோபாலன் உன்னி கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் பேசும் காலத்தில், சமுகத்தில் கிராம மக்களிடையே நிலப்பசி அதிகமாகயிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரியும். நாமும் இங்கே எவ்வளவோ சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். உதாரணமாக, ஹரிஜன மக்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும், தாழ்த்தப்பட்ட மக்களாகிய அவர்கள் சமூகத்தில் நன்றாக முற்போக்காக இருக்கவேண்டுமென்பதற்காக தீண்டாமை ஒழிப்புச் சட்டம், இன்னும் அதுபோன்ற சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். என்றாலும், உண்மையாக ஹரிஜன மக்கள் சமூகத்தில் முற்போக்குக்கு வரவேண்டுமென்றால், அவர்களுடைய நிலப்பசி தீர்க்கப்படவேண்டுமென்று பல தடவைகள் உறுப்பினர்கள் இங்கு எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதற்காகத்தான், கிராமப் புறங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கு வழங்க சர்க்கார் உடனடியாக முன்வரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இப்போது பொதுவாக நஞ்செய் நிலமாக இருந்தால் 2½ எக்கரும், புஞ்செய் நிலமாக இருந்தால் 5 எக்கரும் கொடுக்கலாம் என்று தாக்கீது அனுப்பப்படுகிறது. கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்கள் எல்லாம், நிலம் படைத்தவர்கள் கையில் இருந்து வருகின்றன. எவ்வளவு நிலம் யார் யார் கையிலிருக்கிறது என்பது பற்றி சரிவர survey செய்து, ஜில்லாக்களிலுள்ள முக்கியஸ்தர்களுக்கு தெரிவித்தால்தான், அவர்கள் நிலமற்ற ஏழைகளுக்குத் தெரிவித்து, நிலம் வேண்டுமென்று கேட்கக்கூடிய ஏழைகளுக்கு நிலம் கிடைக்க வழி செய்ய முடியும். ஆனால் இது காரியத்தில் நடப்பதில்லை, அப்படி நடக்க விடுவதுமில்லை நிலம் படைத்தவர்கள். எனவே, அரசாங்கப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, அல்லது நிலம்படைத்தவர்கள் புறம்போக்கு நிலம் வைத்திருந்தாலும் சரி, அவற்றை ஏழைகளுக்கு வழங்க சர்க்கார் உடனடியாக முழு மூச்சுடன் வேலை செய்யவேண்டும்.

மேலும் survey செய்யப்படாத நிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக ஜமீன்தாரி area இன்னும் survey செய்யப்படவில்லை. ஜமீன்களிலுள்ள கணக்குப் பிள்ளைகள் தாங்கள் வைத்ததுதான் சட்டம் என்று வேலை செய்து வருகிறார்கள். எனவே, உடனடியாக இந்த ஜமீன்தாரி area-கள் survey செய்யப்படவேண்டும்.

புறம்போக்கு நிலங்கள் இப்போது எப்படியிருக்கிறதென்றால், ஏழை விவசாய மக்களின்பேரில், அந்த நிலங்களை பெரு நிலசுவாந்தார்களும், நடுத்தர நிலம்படைத்தவர்களும், 10 எக்கர், 12 எக்கர் என்று ஆர்ஜிதம் செய்துகொண்டு, அவர்கள் கண்களில்படாமல் காரியமாற்றிவருகின்றனர். இவற்றையெல்லாம் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுத்து, நிலமில்லாத ஏழை மக்களுக்கு, இந்த புறம்போக்கு நிலங்களை கொடுக்க சர்க்கார் வழி செய்யவேண்டுமென்று எதிர் கட்சியிலுள்ளவர்களும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த விவசாய அங்கத்தினர்களும் பலதடவை இந்த சபையில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை செயலாற்றவேண்டுமென்றுதான் தீர்மானம் கூறுகிறது. திருச்சியில் என்னுடைய தொகுதியில் 4, 5 எக்கர் புறம்போக்கு நிலத்திற்காக பல பாடுகள் பட்டுக்கொண்டிருக்கிறோம். சில சமயங்களில் புறம்போக்கு வரப்போரத்தில் வந்துவிட்டால் சீக்கிரமாக காரியம் நடைபெறுவதில்லை. கணக்குப் பிள்ளை யாருக்கு சேர்ந்தது என்று சொன்னால் காரியம் சீக்கிரம் முடிந்துவிடுகிறது. இல்லையேல், கடைசி வரையில் 4, 5 ஆண்டுகள் ஆனாலும் கிடைக்காமல் போய்விடுகிறது. ஏதோ மிகுந்த பாடுபட்டு எங்கள் தொகுதியில் 4, 5 எக்கரா புறம்போக்கு கிடைத்திருக்கிறது என்றால் நிலைமை எவ்வளவு மோசமாக இருந்து கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆகவே, இந்த விஷயத்தை கனம் ரெவின்யூ மந்திரி அவர்கள் துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமங்களில், சில புறம்போக்கு நிலங்களை ரோட்டுப் புறம்போக்கு, ஏரி புறம்போக்கு என்பார்கள். கிராமங்களுக்கு ஏரிகள் வேண்டியதுதான். ஆனால் ஏரித் தண்ணீர் எவ்வளவு நிலம் பிடிக்கிறது என்பதை அறிந்து, மீதியுள்ள புறம்போக்கு நிலங்களை ஏழை மக்களுக்கு கொடுக்க முடியுமா என்பதை சீக்கிரம் பரிசீலனை செய்யவேண்டும். நேற்று நான் பேசியபோது கூட, இந்த புறம்போக்கு நிலங்களை பற்றிய பரிசீலனைகளை துரிதப்படுத்த, தாசில்தார்களுக்கெல்லாம் வேண்டிய வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். டிபூடி கலெக்டர்களுக்கு கார்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர் அந்த காரை மாதத்தில் 10, 12 நாட்களுக்கு தாசில்தார்களுக்கு கொடுத்தால் போதாது, தாசில்தார்கள் உடனடியாக சுற்றிப்பார்த்து புறம்போக்கு நிலங்களைப்பற்றி புள்ளி விவரங்களை தயாரித்து, நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கவேண்டும். அப்படி வழங்குவதில் **first preference,** முதல் சலுகை யாருக்கு கொடுக்கவேண்டுமென்றால், ஹரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டும். அடுத்தபடி நிலமற்ற ஏழைகளுக்கு கொடுக்கவேண்டும். இந்த விஷயத்தை ஒத்திப்போட்டுக் கொண்டு போகக்கூடாது. முன்பு தோழர் பி. ராமமூர்த்தி இது குறித்து ஒரு சட்டம் கொண்டுவந்தபோது, புறம்போக்கு நிலம் இல்லை என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது. புறம்போக்கு நிலம் இல்லை என்று சொல்ல முடியாது. நிலம் படைத்தவர்கள் நிறைய புறம்போக்கு நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் ஆங்காங்கேயுள்ள கணக்குப் பிள்ளைகள், **Village Munsif**-கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிலம்படைத்தவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் புறம்போக்கு நிலத்தையும், கிராமத்திலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலத்தையும், கிராமம் கிராமாகப் பிரித்து ஏழை மக்களுக்கு கொடுக்க சர்க்கார் வழிவகை செய்யவேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் காரியம் துரிதமாக நடைபெறாவிட்டால், கிராமங்களில் மேலும் மேலும் தகராறுகளுக்கு, தொந்திரவுக்களுக்கு இடமேற்படும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஹரிஜனங்களை முற்போக்குக்கு கொண்டு வரவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு எவ்வளவோ சட்டங்கள் செய்திருந்தாலும்கூட, அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறாத வரையில், இந்த சட்டங்களினால் பலன் ஏற்படும், அவர்களை முற்போக்குக்கு கொண்டுவந்துவிடமுடியும் என்பது வெறும் பகல் கனவாக முடியும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். பொருளாதாரத் துறையில் அவர்கள் பிற்பட்டு இருப்பதால்தான் அவர்கள் அடிமை படுத்தப்படுகிறார்கள், துன்புறுத்தப் படுகிறார்கள், அடிக்கப்படுகிறார்கள். இதை எதிர்த்து அவர்கள் வழக்குகள் பதிவு செய்தாலும், நியாயம் அவர்களுக்கு கிடைப்பதில்லை. ஆகவே, பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைந்தால்தான், சமூகத்தில் அவர்கள் தலை நிமிர்ந்து போகமுடியும். இதை மனதில் கொண்டு, நிலமற்ற இந்த ஹரிஜன மக்களுக்கு மற்றும் நிலமற்ற ஏழைகளுக்கு புறம்போக்கு நிலங்களை, யார் வைத்திருந்தாலும், நிலம் படைத்தவர்கள் வைத்திருந்தாலும் சரி அல்லது சர்க்கார் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, அவற்றை ஜாரி செய்துகொடுக்க நல்லதொரு அமைப்பை, திட்டத்தை அரசாங்கம் வகுத்து ஜில்லா அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The House will now adjourn and meet again at 11 a.m. tomorrow.

The House then adjourned (12–5 p.m.).